மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 20/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமணன் | நாள் | 05.07.2023 |
| தகப்பனார் பெயர் | தானப்பன் | | |

**2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால், தாவா சொத்திற்குரிய பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் ஆகியவற்றில் 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றம் செய்யக்கூடாது என கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி மற்றும் 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் என் உறவினர்கள் என்றால், சரிதான். 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தின் பேரில் உரிமை உள்ளதா என்றால், இல்லை. 1ம் பிரதிவாதியின் தந்தை காளியப்பனுக்கு தான் உரிமை உள்ளது.

3) பொதுவாக வருவாய் துறையினர் பட்டா மாறுதல் செய்வதற்கு ஒரு நிலத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் அந்த நிலத்தில் உள்ள அனுபவத்தின் அடிப்படையிலும் தான் நடவடிக்கை மேற்கொள்வர் என்றால், சரிதான்.

4) வருவாய் துறையினரை பொருத்தவரை தரப்பினர் அளிக்கும் ஆவணத்தின் அடிப்படையில்தான் பட்டா மாறுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றால், சரிதான்.

5) 1ம் பிரதிவாதி, 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளான வருவாய் துறையினரிடம் ஒரு உயில் ஆவணம் அளித்ததாகவும், அதை முறையாக பரிசீலனை செய்யாமல் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்போவதாக சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வருகின்றனர் என நான் சொல்லியுள்ளது தவறானது என்றால், சரியல்ல.

6) வருவாய் துறையினர் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகின்றனர் என்றாலும், எவ்வகையில் எந்த சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகின்றனர் என்றாலும், அதுகுறித்து எனக்கு தெரியாது. ஆனால், நான் வாய்மொழியாக மேற்படி பிரதிவாதிகளிடம் அளித்த கோரிக்கையை அவர்கள் பரிசீலனை செய்யாமல் இருந்தனர். அதனால் அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுவதாக நான் கூறியுள்ளேன்.

7) அவ்வாறு எந்த அதிகாரி சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டார் என குறிப்பாக சொல்ல இயலுமா என்றால், இயலாது. மேலும் அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டது தொடர்பாக அவர்களது உயர் அதிகாரிகளுக்கு ஏதேனும் புகார் அளித்துள்ளோமா என்றால், இல்லை.

8) அவ்வாறு பட்டா மாறுதல் செய்வது தொடர்பாக யாரிடம் முறையிட்டேன் என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம் முறையிட்டேன். மனு அளித்தேனா என்றால், அவர் வாங்கவில்லை. அவ்வாறு கிராம நிர்வாக அலுவலர் மனுவை பெறவில்லை என்றால், அது தொடர்பாக வட்டாட்சியரிடமோ, கோட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சியரிடமோ நான் ஏதேனும் முறையிட்டுள்ளேனா என்றால், இல்லை.

9) கிராம நிர்வாக அலுவலர் மனுவை வாங்க மறுத்துவிட்டார் என நான் கூறும் நிலையில் மேற்படி மனுவை பதிவு தபால் மூலம் நான் மேற்படி கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்ப ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால், இல்லை.

10) எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் அவர்களது வாரிசுகளான 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால், சரிதான். மேற்படி எங்களுக்குள் உள்ள தனிப்பட்ட பிரச்சனை தொடர்பாக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் அரசு அதிகாரிகளை சம்பிரதாயத்திற்காக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல.

11) தாவா சொத்தானது ஆவடத்தூர் கிராமம், ச.எண்.292/3 ல் பட்டா எண்.1349ன் படி ராமகவுண்டர் மகன் சின்னபைய கவுண்டர் என்பவரது பெயரில் உள்ளது என்றால்,

சரிதான். வருவாய் ஆவணங்களும் அவரது பெயரில்தான் உள்ளது என்றாலும், சரிதான்.

12) வருவாய் துறையினர் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட மாட்டார்கள் என்றாலும், எனவே இவ்வழக்கு மேற்படி 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

(5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.